பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 23 | செவ்வாய்க்கிழமை | 10.10.2023 | அதிர்வு 70

## சாதாரண தரப் பரீட்சை மே வரை ஒத்திவைப்பு

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் (2024) மே மாதம் ஆரம்பத்தில் நடத்தப் படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சரியான திகதியைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் 02

# நீதித் துறையையே கைவிட்ட அரசு எப்படித் தீர்வைத் தரும்?




## அநுரகுமார கேள்வி

- சுடர் திலீபன் -

"நீதிபதியை வெளியேற்றி நீதித்துறை சமூகத்தை வீதியில் விட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசு, இன, மதப் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வை வழங்கும்? இந்த அரசை இனியும் நம்புபவர்கள் படுமுட்டாள்களாவர்."

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 02

# இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது இந்தியா - இலங்கை கப்பல் சேவை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று ஆரம்பமாகவிருந்த நிலையில் இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது.

தொழில்நுட்பத் தடங்கல் காரணமாக எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் இந்தச் சேவை பிற்போடப்பட்டுள்ளது என்று

தமிழகத்தின் நாகப்பட்டினத்துக்கும் யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறைக்கும் இடையில் செரியாபாணி என்ற பெயரைக் கொண்ட பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. 02



# வாகனம் தவிர்ந்த ஏனைய பொருள்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடு நேற்று முதல் நீக்கம்!

## நிதி அமைச்சு அதிரடி அறிவிப்பு

வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக கட்டுப்பாட்டுகள் நீக்கப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அறிவித்துள்ளார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான 02



# முன்னாள் பொலிஸ் அதிகாரி காலியில் சுட்டுப் படுகொலை!




பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் காலியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத 02




சில விடயங்களை இப்பத்தியில் தொடாமல் விடுவது நல்லது என்று நினைப்பதுண்டு. ஆனாலும், தவிர்க்க முடியாமல் அவை குறித்தும் எழுத வேண்டி நேர்ந்துவிடுகிறது.

இது கட்சி மாறிய 'பட்சி'யின் எழுத்துப் பற்றிய விவகாரம்.

நீதிபதி சரவணராஜா விடயம் குறித்து ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டிய கூட்டங்கள் குறித்து பிரஸ் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாபித்த ஒரு யாழ் ஊடகத்தின் பட்சியின் பத்தி, இந்தக் கூட்டங்களுக்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா மட்டும் உடையார் பொல்லை அனுப்பிய மாதிரி தன் மகனை அனுப்பிவிட்டுத் தாம் வீட்டில் இருந்து விட்டார் என்று விமர் சித்து உள்ளது.

"கட்சியில் மத்திய குழு உறுப்பினர் என்பதைத் தவிர, வேறு எந்தப் பொறுப்போ, பதவியோ, முடிவு எடுக்கின்ற அதிகாரமோ இல்லாத தனது மகனை, தன் சார்பில் அனுப்புவது எந்த வகையில் நியாயம்?வாரிசு அரசியல் செய்கின்ற மாதிரி தனது மகனைத் தனக்குப் பதிலாக அனுப்பியதைப் பார்த்து 'கருணாநிதி தன் மகன் ஸ்டாலினை அரசியல் வாரிசாகக் கொண்டு வந்த மாதிரி, மாவையரும் மகனைக் கொண்டு வர பிளான் போடுகின்றாரோ?' என்று சனம் சந்தேகிக் கின்றது" – என அந்தப் பட்சி தனது பத்தியில் நீட்டி முழக்கி இருக்கின்றது.

கேள்விகள் சரியாக இருக்கலாம். ஆனால் அப்படி கேட்பதற்கான காரண மும், நேரமும், கேட்கும் தரப்பும்தான் எரிச்சலைத் தருகின்றன.

அந்தப் பட்சி முதலில் இந்தக் கேள்வியைத் தான் யாருக்காக கூசா தூக்கு கின்றதோ அவரிடம்தான் – அதாவது தனது ஊடக முதலாளியிடம்தான் – கேட்டிருக்க வேண்டும் – தனது பத்தி ஊடாக மக்களின் முன் விடயத்தை வைப்பதற்கு முன்பாக.

ஏனென்றால், சாதாரண கட்சி உறுப்பினராக இருந்த மாவையின் மகனைத் தமிழரசு கட்சியின் இளைஞர் அணி தலைவராக்கும் திட்டத்தில் – வாரிசாக்கும் முயற்சில் – (அப்படித்தான் தி.மு.கவில் ஸ்டாலினும் வளர்க்கப்பட்டார்) கிழக்கு மாகாணம் திருகோணமலை, மட்டக்களப்புக்கு எல்லாம் அதற்கான பிரசாரத்துக்கு தாமே கார் ஏற்பாடு செய்து, ஒழுங்குகள் செய்து கொடுத்து, அனுப்பி வைத்து, பின்னால் நின்று துடியாய் துடித்தவர் அந்த ஊடக முதலாளிதான்.

'ஊடகப் போராளி' என்ற யாருடையதோ தோற்றத்தைத் தன் முகமூடியாக அணிந்து கொண்டு, அவர் பண்ணிய தகிடுதத்தங்கள், அவருக்கு செருப்பாய் ஊதியம் செய்யும் பட்சிக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது.

கட்சித் தலைவர் மாவையை வைத்துக் கொண்டு இழந்ததைப் பிடிக்க ஊடக முதலாளி பண்ணிய திருகுதளங்கள் இப்போது 'எட்டாப்பழம் புளிக்கும்' என்ற கட்டத்தை அடைந்து விட்டன போலும். அதனால் வீடெரிக்கும் மந்திரிக்கு நெருப்பு எடுத்து கொடுக்கும் பட்சிகள் இப்படி எழுதத் தலைப்பட்டிருக்கின்றன.

மாவையின் மகனை வாரிசு அரசியலுக்கு குறுக்கு வழியில் வளர்த்தெடுக்க முயன்ற ஊடகமும் அதன் முதலாளியும் இப்போது அவர் குறித்து அபஸ்வரம் பாடுவது எதற்காக? காரணம் உண்டு.

முதலாவது – கட்சியின் மீது மாவையின் பிடி தளர்வதால் இனியும் அவரை நம்பிப் பயனில்லை என்ற நன்றி மறந்த சின்னத்தனம்.

அடுத்தது – இந்தச் சாடல் மாவையருக்கு மட்டுமானதல்ல. இதே போல அண்மைக் காலத்தில் மனோ கணேசன், ஹக்கீம் போன்றோருக்கும் செய்தி முடக்கம் அல்லது இருட்டடிப்பு அவர் ஊடகத்தில். அப்படித்தான் அவரின் பட்சிகள் செயற்படுகின்றன. இந்த மூவரும் (மாவை, மனோ, ஹக்கீம்) முரசு வெளியீட்டுக்காக மேடை ஏறியவர்கள் என்பதுதான் அவர்கள் இழைத்த பெரும் தவறாம்.

அந்த ஊடக முதலாளியின் ஊடகக் கொள்கைப் புத்தகத்தில் அவருக்கு விரும்பாத தரப்புகளை மதிப்பவர்கள் எல்லாம் ஒதுக்கப்பட வேண்டும். அதுதான் இப்போது அந்த ஊடகத்தின் தேசியக் கொள்கை. அதன் நடுநிலை பண்பாம்(?).

அந்தக் கொள்கையை முதுகில் சுமக்கும் ஏவல் பட்சிகள் இப்படித்தான் எழுதும். வேறு வழி இல்லை. இட்ட பிச்சைக்கு எழுதும் பட்சிகள் அவை. அப்படித் தான் செய்ய முடியும்.

பாவம் மாவை. அவர் வெறும் 'ஊடக முதலாளி' மட்டுமே என்பதை அறிந்திருந்தும், அவரை 'ஊடகப் போராளி' யாக உலகுக்கு காட்டிய பெருங் குற்றத்திற் குத் துணை போனமைக்காக இப் போது அனுபவிக்கின்றார். அதுவும் மாவைக்குத் தேவைதான்.

## இறுதி நேரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செரியாபாணி கப்பலின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக இடம்பெற்றிருந்தது.

எனினும், தொழில்நுட்ப ரீதியான தடங்கல் காரணமாக இன்று ஆரம்பமாக விருந்த சேவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

## முக்கிய அமைச்சுக்களை குறி வைக்கிறது மொட்டு

முக்கிய அமைச்சுக்களைப் பெற்றுக் கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர் முயற்சித்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் தமது கோரிக்கையை முன்வைக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து பொதுஜன பெரமுன கட்சியின் மாவட்டத் தலைவர்கள் குழுவொன்று செயற்பட்டு வருகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்துக்கு முன்னர் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் குழுக் கூட்டமொன்றுக்கு பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கமைய, பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம், களுத்துறை, கண்டி, நுவரெலியா, அம்பாறை, குருநாகல் ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் மாவட்டத் தலைவர்கள் குழுவொன்று இந்தச் சந்திப்புக்குத் தயாராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத்திட்டத்துக்குமுன்னதாக அமைச்சரவையில் மாற்றம் செய்ய வேண்டும் என்பதே பொதுஜன பெரமுன கட்சியின் எதிர்பார்ப்பாக உள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இதனை நடைமுறைப்படுத்தாவிட்டால் வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் சிக்கலை ஏற்படுத்தப் பொதுஜன பெரமுனவினர் திட்டம் தீட்டியுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

## சாதாரண தரப் பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவிப்பார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை அடுத்த வருடம் (2024) ஜனவரி மாதத்துக்குப் பிற்போடப்பட்டதைக் கருத்திற்கொண்டு, சாதாரண தரப் பரீட்சை மே மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டு முதல் பரீட்சைகள் வழமை போன்று திட்டமிடப்பட்ட காலப் பகுதிகளில் நடைபெறும் என்றும் அவர் மேலும்கூறியுள்ளார்.

## வாகனம் தவிர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நபர்கள் இருவர், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## நீதித்துறையையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்களப்பில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'இன மற்றும் மதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளைக் காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சுகளை நடத்தவுள்ளேன்' – என்று குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சர்வதேச சமூகத்தை மாத்திரமல்ல இங்குள்ள அரசியல்வாதிகளையும், மக்களையும் ஏமாற்றி ஆட்சியைத் தக்கவைக்கலாம் என்று ஜனாதிபதி தலைமையிலான அரசு கனவு காண்கின்றது. தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அரசின் கனவு தவிடுபொடியாகி விடும்.

இங்குள்ள சில அரசியல்வாதிகள் கோமா நிலையில் இருந்தாலும் நாட்டு மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு மாற்றத்தை விரும்புகின்றார்கள்.

வடக்கு, கிழக்கு சென்று ஒன்றையும், தெற்கில் இன்னொன்றையும், வெளிநாடு சென்று மற்றொன்றையும் மாறி மாறி சொல்லித் திரியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பகிரங்கமாக ஒரு சவாலை விடுகின்றோம். அதாவது முடிந்தால் தேசிய ரீதியில் ஒரு தேர்தலை நடத்திக் காட்டுங்கள்." – என்றார்.

# சிங்களவர்களுக்குப் பாதுகாப்பு தமிழர்களுக்கு அடியும் உதையும்

## மட்டக்களப்பில் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பில் வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் கடும் விசனம்

– எஸ்.நிதர்ஷன்–

“சிங்கள மக்களுக்கும் பௌத்த பிக்குகளுக்கும் மரியாதை செலுத்தி பாதுகாப்பு வழங்குகின்ற அரச படைகள் தமிழ் மக்கள் என்றவுடன தாக்குதல்களை நடத்துகின்றன.”

– இவ்வாறு வடக்கு – கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்படி சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு, கிழக்கில் கடத்தல்களும் சித்திரவதைகளும் நாடு கடத்தல்களும் அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் இப்போது தீவிரம் பெற்றுள்ளன.

இத்தகைய அராஜக நடவடிக்கையை அரசு நிறுத்த வேண்டும். ஆனாலும், அடக்குமுறைகளும அராஜகங்களும் தொடருவது மிகவும் ஆபத்தானது.

இவ்வாறான நிலையில் மட்டக்களப்பில் நடைபெற்ற போராட்டத்தினபோது எமது தமிழ் மக்கள் மீது அரச படைகள. தாக்குதலை நடத்தியுள்ளனர்.

குறிப்பாக எமது சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவி மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர். பொலிஸாரின் இத்தகைய தாக்குதல் சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நீதிக்காகத் தமிழ் மக்கள் போராடுகின்றபோது அரசின் அத்தனை இயந்திரங்களும் தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்படுகின்றன.




அதேநேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் அரசின் அடக்குமுறை றைகளைக் கண்டிக்கின்றோம். இந்த அரசை விரட்டியடிக்க வேண்டும்.

அமைதியாக இருக்கும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அரச அடக்குமுறைகளுக்குத் தமிழ் மக்களாக ஒன்று திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தித் தொடர் போராட்டங்களை நடத்த வேண்டும்.

அரசால் பாதிக்கபட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கச் சர்வதேசம் உதவ வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளத் தடுத்து நிறுத்துவதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் முதுகெலும்பு உள்ளவர்களாக அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்.” – என்றார்.



# பொலிஸ் சார்ஜன்ட் மர்மச் சாவு; சி.ஐ.டி. விசேட குழு விசாரணை

பொலனறுவை, வெலிக்கந்தை பொலிஸ் விடுதியில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் மர்மமாக உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியின் விசேட குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவில் 12 பேர் கொண்ட இந்த விசேட குழு, வெலிக்கந்தை பகுதிக்குச்சென்றுஇந்தவிசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி, வெலிக்கந்தை பொலிஸ் விடுதியிலிருந்து ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த 52 வயதான பொலிஸ் சார்ஜன்ட் ஹனீபா சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

நாடாளுமன்ற பொலிஸ் பிரிவில் கடமையாற்றிய அவர், கடந்த ஏப்ரல் மாதம் அவர் வெலிக்கந்தைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

அவர் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்து அறையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர், இரத்தம் சிந்தியுள்ளதை அவதானித்து தேடிப் பார்த்தபோது பொலிஸ் சார்ஜன்ட் வலது கையின் மணிக்கட்டுப் பகுதியில் வெட்டுக்காயத்துடன் அறையில் விழுந்து கிடந்துள்ளார்.

அருகே ஜன்னல் கண்ணாடியில் ஒரு பகுதியும் உடைந்து இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

சார்ஜட்டின் மரணம் குறித்து பொலனறுவை சட்ட வைத்திய அதிகாரி முன்னெடுத்த பிரேத பரிசோதனைகளின்போது, மணிக்கட்டுப் பகுதி வெட்டுக்காயத்தால் பெருமளவான இரத்தம் வெளியேறி மரணம் சம்பவித்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையிலேயே இந்த மர்ம மரணம் தொடர்பில் விசாரிக்க சி.ஐ.டியின் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# ‘எட்டயா’வின் உதவியாளர்கள் நால்வர் வாள்கள், ஹெரோயினுடன் சிக்கினர்

திட்டமிடப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த “எட்டயா“ என அழைக்கப்படும் நுவானின் உதவியாளர்கள் நால்வர் கூரிய வாள்களுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுபோவில விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின்படி,

தெஹிவளை தர்மபாலராமய வீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேக நபர்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நான்கு சந்தேக நபர்களும் தம்புத்தேகம பிரதேசத்தில் வசிக்கும் 23 - 28 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான நபரிடம் விசாரணை நடத்தியபோது, அவரிடம் இருந்து 20 மில்லிகிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர், கல்கிஸை ஸ்ரீதர்மபாலராம வீதியில் உள்ள சந்தேக நபரின் வீட்டைச் சோதனையிட்ட போது, 6 வாள்களுடன் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காகத் தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவருக்கு முன்னரே பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண் கிராம சேவையாளரிடம் யாழில் வழிப்பறிக் கொள்ளை

யாழ்ப்பாணத்தில் பெண் கிராம சேவையாளரிடம் இருந்து ஒரு இலட்சத்து 75ஆயிரம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான கையடக்கத் தொலைபேசி உள்ளிட்டவை வழிப்பறிக் கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - உரும்பிராய் சந்திக்கு அருகில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பெண் கிராம சேவையாளரின் கை பையை மோட்டார்சைக்கிள் வந்த இரு இளைஞர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.

கை பையினுள் ஒரு இலட்சத்து 75ஆயிரம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான கையடக்கத் தொலைபேசி உள்ளிட்டவற்றுடன் முக்கிய ஆவணங்கள் சிலவும் காணப்பட்டன என்று பெண் கிராம சேவையாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் அந்தப் பெண் கிராம சேவையாளரால் கோப்பாய்



பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தினசரி பாடசாலைக்குத் தவறாது மாணவர்கள் செல்வது கட்டாயம்

## கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

அனைத்துத் தரங்களிலும் உள்ள மாணவர்கள் நாளாந்தம் பாடசாலைக்குச் சமுகமளிக்க வேண்டியது கட்டாயமானது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி – அயகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் நாளாந்த பாடசாலை வருகை வீழ்ச்சியடையுமாயின், எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் பரீட்சைகளில் அவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்த வருடம் ஜனவரி மாதம், கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்திலும் ஆரம்பப் பிரிவுகளுக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.



# வடக்கு - கிழக்கில் 20 இல் ஹர்த்தால்!

## தமிழ்க் கட்சிகள் தீர்மானம்



– எஸ்.நிதர்ஷன் –

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியும், தமிழர்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டித்தும் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 20ஆம் திகதி ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளன.

ஹர்த்தால் தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்குத் தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

இந்தக் கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியுன் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் ரெலோ அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தியாகாரஜா நிரோஷ் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.





# இஸ்ரேல் நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கின்றதாம் இலங்கை அரசு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



இஸ்ரேலில் இடம்பெற்ற தாக்குதல்கள், அங்கு வாழும் இலங்கையர்கள் மற்றும் இஸ்ரேலிய மக்கள் மீது ஏற்படுத்திய பாதிப்புகள் குறித்து உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருகிறோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவைக்கு விசேட அறிவிப்பொன்றை முன்வைத்த ஜனாதிபதி, இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் ஆராய்ந்து அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாகவும் ஊழியர்களாகவும் வருகை தந்துள்ள இஸ்ரேலியர்கள் தமது நாட்டுக்குத் திரும்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும், இலங்கையில் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறும் பொலிஸ் திணைக்களத்திற்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் எனும் இரு நாட்டுக் கொள்கைக்கான இலங்கையின் நீண்டகால ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஜனாதிபதி, பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பினரால் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்து சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், இவ்வாறான தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடி நிலை உலகளாவிய எரிபொருள் விலையில் ஏற்படுத்தக்கூடிய கடுமையான தாக்கத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். ஆபிரிக்க ஒன்றியத்தின் பரிந்துரையின் படி, இந்த மோதலை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் இடம்பெற்று வரும் இந்த மோதல்கள் காரணமாக எரிபொருளின் விலையில் நீண்டகால அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனவும் இது இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அணி தாவியோருக்குச் சிக்கல்

'தென்னையில் தேள் கொட்ட, பனையில் நெறி கட்டிய மாதிரி...!' என்று ஒரு பேச்சு வழக்கு நம் மத்தியில் உண்டு.

இப்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி விடயத்தில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு, வேறு பல கட்சிகள், அணிகளுக்குள்ளும் குலப்பன் காய்ச்சலை ஏற்படுத்தி இருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்குத் தெரிவானவர், அக்கட்சியின் முடிவுக்கு மாறாக செயற்பட்டமைக்காக அக்கட்சி அவரின் உறுப்புரிமையை நீக்குமானால், அது சட்டவிரோத நடவடிக்கை அல்ல என்ற சாரப்பட உயர் நீதிமன்றம் உறுதியான தீர்ப்பு ஒன்றை வழங்கி இருக்கின்றது.

2021 இறுதியில் இடம்பெற்ற வரவு - செலவு திட்ட வாக்கெடுப்பின்போது, கட்சி உயர் பீடத்தின் முடிவுக்கு மாறாக, அந்தத் திட்டத்தை ஆதரித்து நஸீர் அஹமட் வாக்களித்தமையால் கட்சியில் இருந்து அவரின் அடிப்படை உறுப்புரிமையை நீக்கி, கட்சியின் உயர்பீடம் முடிவெடுத்திருந்தது. இதை ஆட்சேபித்து நஸீர் அஹமட் தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது. அவரின் கட்சி உறுப்புரிமை இழப்பு சட்டரீதியானது என்று உயர்நீதிமன்றம் அறிவித்தமையால் எம்.பி. பதவியையும், அதன் காரணமாக அமைச்சர் பதவியையும் அவர் இழக்க வேண்டியவரானார்.

இதே சிக்கல் வரும் வரவு - செலவுத் திட்டத்தில் பலருக்கும் பெரும் நெருக்கடியாக வரவிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்திருக்கின்றார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் நாடாளுமன்றுக்கு தெரிவான ஹரீன் பெனாண்டோ, மனுஷ நாணயக்கார, டயானா கமகே போன்றோரும் அணி மாறி, அரசுத் தரப்பில் சேர்ந்து, அமைச்சர்களாகியிருக்கின்றனர். அதற்காக அவர்களை ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இருந்து கட்சியின் செயற்குழு நீக்கி உள்ளது.

நஸீர் அஹமட் போல கட்சியின் முடிவை ஆட்சேபித்து இவர்கள் மூவரும் கூட, உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்துள்ளனர். அந்த மனுக்களும் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

இப்போது வரப்போகும் வரவு - செலவுத் திட்டம் தொடர்பிலும் அவர்களது 'ஒரிஜினல்' கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தனது முடிவை எடுத்து, அவர்களுக்கு அறிவிக்கும். அதற்கு மாறாக, அரசின் வரவு - செலவுத் திட்டத்தை இந்த அமைச்சர்கள் ஆதரித்து வாக்களித்தால் நஸீர் அஹமட்டுக்கு நேர்ந்த கதி அவர்களுக்கும் நேரலாம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் ஒரு வழிகாட்டல் தீர்ப்பு இருப்பதால், அதைத் தொடர்ந்து வருகின்ற தீர்ப்பு அதன் பாதையில் விரைந்து வர வாய்ப்புகள் நிறைய உண்டு

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பல கட்சிகளில் இருந்தும் விலகி, தத்தமது கட்சிகளுக்கு மாறாக, தம் பாட்டில் தனி அணிகள், குழுக்கள் அமைத்து செயற்படுவோருக்கும் உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் கடும் நெருக்கடி ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. பார்ப்போம் என்ன நடக்கப்போகின்றது என்பதை.

# இலங்கையில் நீதி மரணித்துவிட்டது!

## கவனவீர்ப்பு நடவடிக்கையின்போது ரவிகரன் தெரிவிப்பு



இலங்கையில் தற்போது நீதி மரணித்துவிட்டதாகவே உணர முடிகின்றது என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் போதைப்பொருட்கள் பல்கிப் பெருகியுள்ளதுடன், சட்டவிரோத செயற்பாடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில், நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு இந்த நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ள நிலைமை இந்த நாட்டில் நீதி மரணித்ததற்கு ஒப்பானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்று, நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி இடம்பெற்ற கவன வீர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"நீதிபதி சரவணராஜா மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டமை மற்றும், உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கு நீதி கோரி தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து கொழும்பில் உயர் நீதிமன்றம் முன்பாகப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர். குறித்த தினத்தில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களாலும் கவனவீர்ப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கவனவீர்ப்பு நடவடிக்கைக்கென முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் அழைப்பு விடுத்திருந்த நிலையில், புலனாய்வாளர்கள் பல வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அவ்வாறு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால், பல இளைஞர்கள் இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கையில் இணைந்துகொள்ளவில்லை.

இருப்பினும் கணிசமான இளைஞர்கள் முகத்தில் கறுப்புத்துணி கட்டி, கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் அதனைத் தொடர்ந்து, மேலதிக மாவட்ட செயலரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நீதி மரணித்துவிட்டது என்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. ஏனெனில் தற்போது நாட்டிலே போதைப்பொருட்கள் பல்கிப் பெருகிப் போயுள்ள நிலையில், நாட்டு மக்கள் இவற்றால் பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறான சூழலில் நீதிபதி சரவணராஜா, நீதியின் பங்கம் நின்று கட்டளை வழங்கியமைக்காக அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு இந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இத்தகைய நிலைமைகள் இந்த நாட்டில் நீதி மரணித்து விட்டதான உணர்வையே முழு நாட்டு மக்களுக்கும் உணர்த்துகின்றது.

எனவே, நீதிபதி சரவணராஜா விடயத்தில் சரியான விதத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நியாயமான தீர்வை வழங்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு."
– என்றார்.




# நெதர்லாந்துடனான ஆட்டத்திலும் நியூஸிலாந்து வெற்றி!

நெதர்லாந்துடனான உலகக் கிண்ண லீக் போட்டியில் நியூஸிலாந்து வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

13ஆவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், நேற்று டில்லியில் நடைபெற்ற பகல் – இரவு ஆட்டத்தில் நியூஸிலாந்து – நெதர்லாந்து அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 322 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில், வில் யங் (70), ரஷின் ரவிந்திர (51), டொம் லதம் (53) ஆகியோரின் அரைச்சதம் கடந்தனர்.

நெதர்லாந்தின் பந்துவீச்சில், ஆர்யன் டுட், பௌல் வன் மீகெரன், டெர் மேர்வ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைச் சாய்க்க, டி லீட் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பின்னர் 323 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய நெதர்லாந்து அணி, தன்னாலான ஓட்ட எண்ணிக்கையாக 223 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதன்படி நியூஸிலாந்து அணி, 99 ஓட்டங்களால் வெற்றிபெற்று அசத்தியது.

நெதர்லாந்து அணி சார்பாக ஆகக்கூடுதலாக கொலின் அக்ரீமன் (69) அரைச்சதம் கடந்தார்.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் மிச்செல் சன்ட்னெர் 5 விக்கெட்டுகளைச் சாய்க்க, மற் ஹென்ரி 3 விக்கெட்டுகளையும் ரஷின் ரவிந்திர ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக நியூஸிலாந்தின் மிச்செல் சன்ட்னெர் தெரிவானார்.

நியூஸிலாந்து அணி எதிர்கொண்ட இரண்டாவது ஆட்டத்திலும் வெற்றி பெற்றதன் மூலம் அந்த அணி புள்ளிப் பட்டியலில் 4 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.



# நில்வளா கங்கை தொடர்பில் விசேட கவனம்: ஜீவன் தொண்டமான் தலைமையில் கூடி ஆய்வு

மாத்தறை நில்வளா கங்கையில் தடுப்பணையில் உள்ள ஒரு பகுதியை மாற்றுவதற்கும், கிளை ஆற்றில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப ரீதியிலான தீர்வைக் காண்பதற்கான விசேட கூட்டம் ஒன்று நேற்று நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் மாத்தறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில், நில்வளா கங்கையில் அமையப்பெற்றுள்ள தடுப்பணையால்தான் இந்த நிலைமை என மக்கள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

வறட்சி காலத்தில் கடல் நீர் ஆற்றுடன் வந்து கலக்காமல் இருப்பதற்காகவும், சுத்தமான குடிநீர் பெறும் நோக்கிலும் தான் இந்த தடுப்பணை அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இக்கூட்டத்தின் போது வெள்ள அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப ரீதியில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இவ்வேளையிலேயே அந்த தடுப்பணையில் ஒரு பகுதியை மாற்றுவதற்கும் அந்த ஆற்றில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொறியியலாளர்களின் மேற்பார்வையின் மூலம், இராணுவம் மற்றும் கடற்படையில் உள்ள அதிகாரிகளின் உதவியுடன் இந்த ஆரம்பக்கட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதேபோல எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருப்பதற்காக எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் நீர்வழங்கல் அமைச்சும், நீர்ப்பாசனத்துறை அமைச்சும் இணைந்து ஒரு கூட்டு அமைச்சரவை பத்திரத்தை முன்வைக்கவும் கொள்கை ரீதியில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த விசேட கூட்டத்தில் அமைச்சருடன், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நீர்ப்பாசனத்துறை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிபுண ரணவக்க, புத்திக பத்திரண, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், நீர்ப்பாசனத்துறை அமைச்சின் அதிகாரிகள், மாத்தறை மாவட்ட செயலாளர் உட்பட அதிகாரிகள், பொறியியலாளர்கள் என முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.





# பிரதான ஆறுகளின் நீர்மட்டம் அதிகரிப்பு

கிங் கங்கையின் நீர்மட்டம் அதிகரித் துள்ளதுடன், பத்தேகமை பகுதியில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

அத்துடன், நில்வளா கங்கையின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக தல்கஹாகொடை மற்றும் பனதுகம ஆகிய பகுதிகளில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

களுகங்கையின் நீர்மட்டம் அதிகரித் துள்ளமையை அடுத்து கலவெல்லாவ பகுதியிலும் வெள்ளநீர் புகுந்துள்ளது என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இந்த நிலையில், களனி கங்கை, மகாவலி கங்கை உள்ளிட்ட ஆறுகளின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.




# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பின் 04 இடங்களில் டெங்கு நோயாளர்கள்பதிவாகும்வீதம்அதிகரித்து வருகிறது என கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

நாரஹேன்பிட்ட, கிருலப்பனை, முகத் துவாரம் மற்றும் மட்டக்குளி ஆகிய பகுதிகளில் இவ்வாறு டெங்கு நோயா ளர்களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது என மாநகர சபையின் பிர தான சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

3 வாரங்களுக்கு முன்னதாக இந்த பகுதிகளில் நாளாந்தம் 2 டெங்கு நோயா ளர்கள் பதிவாகியிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அந்த எண்ணிக்கை 5 அல்லது 6 வரை அதிகரித்துள்ளது என பிரதான சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி கூறியுள்ளார்.

# ஐஸ், போதை மாத்திரைகளுடன் முல்லைத்தீவில் இளைஞன் கைது

முல்லைத்தீவில் ஐஸ் போதை மாத் திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள் ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளை பகுதி யில் முல்லைத்தீவு விமானப்படை புல னாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் முள்ளிய வளை பகுதியை சேர்ந்த 20 வயதுடை யவர் எனவும் , இவரிடம் இருந்து 486 போதை மாத்திரைகளும், 34 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப் பற்றப்பட்டுள்ளன.





கைது செய்யப்பட்ட இளைஞர் அன்றைய தினமே நீதிமன்றில் முற்படுத் தப்பட்டு பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரிய சாந்தனின் வழக்கிலிருந்து நீதிபதி விலகல்



இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரி, ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான சாந்தன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் இருந்து நீதிபதி சுந்தர் மோகன் விலகியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவரான சாந்தன், இலங்கையை சேர்ந்தவர். அவர் தன்னை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த மாதம் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், இலங்கையில் உள்ள தனது தாயார் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால், உடனிருந்து அவரை கவனித்துக்கொள்ளும் வகையில் திருச்சி முகாமில் இருந்து விடுவித்து இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு மீது நடவடிக்கை எடுக்காத நிலையில் தன்னை இலங்கை அனுப்ப மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், சுந்தர் மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கின் விசாரணையில் இருந்து விலகுவதாக நீதிபதி சுந்தர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, இந்த மனுவை வேறு நீதிபதிகள் அமர்வில் பட்டியலிட, தலைமை நீதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# காவிரி நதிநீர் விவகாரத்தில் பொறுப்பற்று பேசுகிறார் மோடி!

## - சீமான் குற்றச்சாட்டு

காவிரி நதிநீர் விவகாரத்தில், பிரதமர் மோடி தனது பொறுப்பை மறந்து பேசுகிறார் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்துக்கு காவிரி நீரை வழங்க வலியுறுத்தியும் கர்நாடக மாநில அரசு, மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதன்போது செய்தியாளர்களிடம் பேசிய சீமான், காவிரி நதிநீர் பிரச்சினையில் நீதிமன்றம் சென்றுதான் உரிமையை நிலைநாட்ட முடியும் என்றால், நாடாளுமன்றம், சட்டப்பேரவை எதற்கு என்ற கேள்வி எழுகிறது.

ஆனால், இந்தியப் பிரதமர், காவிரி நீர் பிரச்சினைக்கும், தனக்கும் சம்பந்தமே இல்லாததுபோல இண்டியா கூட்டணியில் உள்ள இரு கட்சிகள் காவிரி நீருக்காக மோதிக் கொள்கின்றன என்று பேசுகிறார். காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு தனக்கு இருக்கிறது என்பதை அவர் மறந்து பேசுகிறார் என்று தெரிவித்துள்ளார்.

# வன்முறை ஒருபோதும் தீர்வை தராது: பாலஸ்தீனத்துக்கு காங்கிரஸ் ஆதரவு!




இஸ்ரேல் – பாலஸ்தீன மோதலில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிக்கின்றோம் என காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. அத்துடன், போர் நிறுத்தம் வேண்டும் எனவும் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

நேற்று நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தின்போது இதுதொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானத்தில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதலைத் தீர்க்க பேச்சுவார்த்தையே சரியான தீர்வு என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஜெய்ராம் ரமேஷ் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இஸ்ரேல் மக்கள் மீதான மிருகத்தனமான தாக்குதல்களை இந்திய தேசிய காங்கிரஸ் கண்டிக்கிறது. இஸ்ரேலிய மக்களின் நியாயமான பாதுகாப்பு நலன்களை உறுதி செய்யும் அதேவேளையில் சுயமரியாதை, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்க்கைக்கான பாலஸ்தீன மக்களின் நியாயமான விருப்பங்கள் பேச்சுக்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். எந்தவொரு வன்முறையும் ஒருபோதும் தீர்வை வழங்காது. எனவே, போர் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேல் மீதான ஹமாஸ் குழு தாக்குதலை பயங்கரவாத தாக்குதல்கள் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இஸ்ரேலுக்கு இந்தியா முழு ஆதரவு வழங்கும் எனவும் அவர் அறிவித்தார்.

இந்த நிலையில், தற்போது, பாலஸ்தீனத்துக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

# காசாவை முழுமையாக கைப்பற்ற இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு



ஹமாஸ் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக காசா பகுதியில் இஸ்ரேல் தொடர் வான்வெளித் தாக்குதல் களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காசா பகுதியை முழுமையாக கைப்பற்ற இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவவ் காலண்ட் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவவ் தெரிவிக்கையில், காசா பகுதியை நாங்கள் முழுமையாக முற்றுகையிட்டுள்ளோம். அப்பகுதி அனைத்தும் எங்கள் கட்டுப்பாட்டில் உள்ளன. அங்கு மின்சாரம், உணவு, குடிநீர், எரிவாயு என எதுவும் கிடைக்க அனுமதிக்க போவதில்லை. எல்லாம் முடக்கப்பட்டுள்ளது. நாங்கள் மனிதர் களுடன் சண்டையிடவில்லை. மிருகங்க ளுடன் மோதுகிறோம். எனவே, அதற் கேற்ப தான் நடந்துகொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நேற்று முன்தினம் ஒரே நாள் இரவில் போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், பீரங்கிகள் என ஆகியவற்றை கொண்டு காசாவில் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாதி களின் 500 இற்கும் மேற்பட்ட இலக்குகளில் தாக்கப்பட்டன என்று இஸ்ரேலிய பாதுகாப்புப் படை அறிக்கை வெளியிட்டுள்ளது.

லெபனானில் இருந்து ஆயுதங் களுடன் ஊடுருவிய தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது. இந்த நிலையில் ஹமாஸ் தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் அமெரிக்கர்கள் 9 பேர் பலியாகியுள்ளனர் என அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

சகடந்த னிக்கிழமை முதல் ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்தி வரும் தாக்குதல்களால் இஸ்ரேல் தரப்பில் 700 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் 260 பேர் ஓர் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள். இந்தத் தாக்குதல் களின்போது 100 இஸ்ரேலியர்கள் கடத்தப்பட்டு, காசாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் கூறியுள்ளது.

அதேபோல், ஹமாஸ் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் வான்வெளித் தாக்குதல்களால் காசா பகுதியில் வாழ்ந்து வந்த பாலஸ்தீனயர்கள் 500 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இருதரப் பிலும் ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர்.

# நியூயோர்கில் இஸ்ரேல், பாலஸ்தீன ஆதரவாளர்கள் கடும் வாக்குவாதம்

நியூயோர் நகரிலுள்ள டைம்ஸ் சதுக்கத்தில் பாலஸ்தீன ஆதரவாளர் களின் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஹமாஸ் தீவிரவாதிகளின் தாக்கு தலை ஆதரித்த இவர்களுக்கும், இஸ்ரேல் ஆதரவாளர்களுக்கும் இடை யில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ‘பாலஸ்தீனம் விடுதலை பெறும்’ என்று ஒரு தரப்பினர் முழக்கமிட, மற்றொரு தரப்பினர் ‘இது உங்களுக்கு அவமானம்’ என்று முழக்கமிட்டுள்ளனர்.

இந்தப் பேரணியை நியூயோர்க் சாப்டர் ஆஃப் தி டெமாக்ரட்டிக் சோசலிஸ்ட் என்ற அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. பாலஸ்தீன மக்களுடன் ‘ஒற்றுமை’ மற்றும் ‘75 ஆண்டு கால ஆக்கிரமிப்பு மற்றும் நிறவெறியை’ எதிர்க்கும் உரிமையை எடுத்துக்காட்டுவதற்காக இந்தப் பேரணி நடத்தப்பட்டது என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்ப்பு நியாயமானது’ என்று பாலஸ்தீன ஆதரவாளர்கள் முழக்கிடும் போது, அதற்கு எதிரணியினர் பதிலடி கொடுக்க, அங்கு ஒரு பதற்றம் நிலவியது. அப்போது, பேரணியில் கலந்துகொண்ட ஒருவர், இஸ்ரேலியே எதிப்பாளர்களை நோக்கி ‘நாஜி சின்னத்தினை காண்பித்தது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அவரின் இந்தச் செயலுக்கு பயனர்கள் பலர் தங்க ளின் எதிர்ப்பு மற்றும் அதிர்ச்சியை வெளிப் படுத்தி வருகின்றனர்.

இதனிடையே, நியூயோர்க் நகர ஆளுநர் இந்த பாலஸ்தீன ஆதரவு பேரணி குறித்து தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் கூறுகையில், இது தார்மிக ரீதியாக வெறுக்கத்தக்கது. இஸ்ரேலியர்கள் தீவிரவாத வன்முறை தாக்குதல்களையும், கடத்தல்களையும் எதிர்கொள்கின்றனர் என்று தெரிவித் துள்ளார்.

இஸ்ரேல் மீதான ஹமாஸ்களின் தாக்குதலுக்கு எதிராக நியூயோர்க் மேயர் எரிக் ஆடம்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், தீவிரவாதக் குழுக்களின் கோழைத்தனமான செயல் என்று தெரிவித்துள்ளார்.



# ஓட்டோ உரிமையாளர்கள் நாளை யாழ். நகரில் கவனவீர்ப்புப் பேரணி

யாழ்ப்பாணத்தில் ஓட்டோ உரிமையாளர்கள் நாளை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாளை புதன்கிழமை காலை பண்ணையில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் ஓட்டோப் பேரணி யாழ் நகரில் உள்ள வீதிகள் வழியாகச் செல்லும். இறுதியில் கடற்றொழில் அமைச்சரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படும் என ஓட்டோ சங்கத்தினர் தெரிவித்தனர்.

குறிப்பாக அண்மைய நாள்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புதிய செயலி மூலமான ஓட்டோ சேவையை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக நீண்ட காலமாக ஓட்டோவைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டு செயல்படுபவர்பவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

# தேர்தலை ஒத்திவைக்க அரசு சதி!

## நேரத்துடன் எச்சரிக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

ஏற்கனவே தேர்தலை ஒத்திவைத்துள்ள அரசாங்கம் அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலைகளையும் ஒத்திவைக்கத் தேவையான கூட்டுச் சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் செய்து வருகின்றது என்பது இரகசியமான விடயமல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

"தேர்தல் முறையை மாற்றியமைத்தல்" என்ற ஐசிங் கேக் துண்டை நீட்டுவதன் மூலம் அரசாங்கம் இதற்குத் தயாராகிறது. இது விஷம் கலந்த கேக் துண்டு என்றும், இவற்றுக்கு இந்நாட்டு மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பதையும் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டுகிறோம்.

மக்களின் இறையாண்மையுடன் விளையாடும் தற்போதைய அரசாங்கம், நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சட்டவிரோதமான முறையில் பிற்போடுவதன் மூலம் தனது தீர்க்கரமான தொடக்கத்தை



ஆரம்பித்தது.

மக்கள்ஆணைஇல்லாதஆட்சியாளர்களுக்கு மக்களின் ஆசிர்வாதம் எந்த வகையிலும் கிடைக்கப்பெறாது. சந்தர்ப்பவாதமாக ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர்கள், மக்களின் ஆணையையோ அல்லது விருப்பத்தையோ கருத்தில் கொள்ளாது, பல்வேறு அரசியல் தந்திரங்களைப் பயன்படுத்திக் கொண்டு, மது ஆளுகைச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியின் முடிவு ஆபத்தானது என்பது முழு உலகமும் உணரக் கூடிய உண்மையாகும்.

இந்நாட்டில் தேர்தல்கள் பிற்போடப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட அவலங்களுக்கு பல உதாரணங்கள் உள்ளன. இந்நாட்டை மீண்டும் இருண்ட கடந்த காலத்துக்கு கொண்டு செல்லவா தற்போதைய அரசாங்கம் தயாராகி வருகின்றது என நாம் கேள்வி எழுப்புகின்றோம்.

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம், நடத்தப்பட வேண்டிய தேர்தலை ஒத்திவைப்பதும், நடத்தாமல் இருப்பதும் ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் மீதான கடுமையான தாக்குதல் என்பது இரகசியமான விடயமல்ல.

"தேர்தல் ஒத்திவைக்கப்படாது, ஒத்திவைக்கப்பட தேர்தலொன்று இல்லை" என மக்கள் இறைமையுள்ள நாடாளுமன்றத்தில் வைத்து கேலிக்கையாகவும், ஏளனமாகவும், அவமதிக்கும் விதமாகவும் பேசிய ஜனாதிபதியைக் கொண்ட அரசாங்கத்திலிருந்து தேர்தலை எதிர்பார்ப்பது வெறும் கனவுதான் என்றாலும், இந்த ஒருதலைபட்ச செயல்முறைக்கு எதிராக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதையும் அரசாங்கத்திற்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

ஜனநாயகத்தையும் மக்கள் இறையாண்மையையும் நசுக்க எடுக்கும் சர்வாதிகார மற்றும் ஜனநாயக விரோத அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மக்கள் சக்தியால் தோற்கடிக்கப்படும் என்பதை நாங்கள் அரசாங்கத்திற்கு வலியுறுத்துகிறோம். – என்று உள்ளது.

# 55 ஆயிரம் கோடி ரூபா செலவில் பூநகரியில் சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டம் வருகிறது













தேசிய மின்சார அமைப்பிற்கு தினசரி 6.5 வீத புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் திட்டம் 170 கோடி அமெரிக்க டொலர்கள் (சுமார் 55 ஆயிரம் கோடி ரூபா) செலவில் வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

தேசிய மின்சார அமைப்பிற்கு தினமும் 6.5 வீத புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் சூரிய சக்தி மின் அமைப்பு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் 170 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் என கூறப்படுகின்றது.

தனியார் சூரியப்படல நிறுவனம் ஒன்றின் தலைவர் ஜயந்த சமரகோன் தெரிவிக்கையில் –

வட மாகாணத்தில் பூநகரி ஏரியை அண்மித்த பகுதிகளில் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டம் செயற்படுத் தப்படவுள்ளது. 1000 ஏக்கரில் 700 மெகாவோல்ட் சூரிய சக்தி மின் அமைப்பு நிறுவப்படும்.

மேலும் சூரிய சக்தி மின் அமைப்பு அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பூநகரி ஏரியை முழுமையாக அபிவிருத்தி செய்து அப்பிரதேசத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் வகையில் விவசாயிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் ஐந்நூறு ரூபாவினை செலவழிக்க உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தேசிய மின்சார அமைப்பில் சேர்க்கப்படுவதால் அப்பகுதி விவசாயிகள் பயனடைவார்கள்.

இது தொடர்பான திட்ட மீளாய்வு கூட்டம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் நீர்ப்பாசன திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம், மின்சார சபை, விவசாய திணைக்களம் ஆகியவற்றை சேர்ந்த அதிகாரிகளும் மற்றும் பல அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.10.2023




இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும். இதனால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.

பதட்டம் காரணமாக கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று மிதமான வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷயங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இரவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதி நிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. இழப்புகளைத் தவிர்க்க பணத்தை பாதுகாக்க வேண்டும்.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம்காணப்படும். இன்றுஅனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -10.10.2023




இன்று சிறிது மந்தமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் அதில் நற்பலங்களைக் காண முடியும்.

பணியில் கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும். கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் உங்கள் திறமை மேம்படும்.

இன்று நீங்கள் அற்பமான விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணம் குறைந்து காணப்படும். பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

உங்கள் தந்தையாருக்கு உடல் நல பாதிப்பு ஏற்படும். இதனால் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பல னைத் தரும்.

பணியிடத்தில் திருப்தி நிலவும். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் சகஜமான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் மகிழ்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் அமைதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று தன்னம்பிக்கை குறைவாகவும், நம்பிக்கையின்மையும் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளில் தவறு நேர வாய்ப்பு உள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையுடன் ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது. உறவில் அமைதி ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் அவசியம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது பண இழப்பு ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி மற்றும் உயரமுத்த வாய்ப்புகள் காணப்படும்.




இன்று பல உற்சாகமான தருணங்களை நீங்கள் சந்திக்கலாம். புதிய கட்ட வளர்ச்சி காண்பீர்கள். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை பகிர்ந்துகொள்வீர்கள். இது இருவருக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும்.

பண வரவு சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan Group Chairman ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
CENTRALPAR JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park